# மாகாணசபைத் தேர்தல் மே. 17-ல் நடைபெறும்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 27 இதழ் 53
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 09 — 04 — 1993

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் -9-4-1993

## 2000 பேர் போட்டி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 17-ந் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் இதில் போட்டியிடவுள்ளனர்.

மேற்படி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வது நேற்று நண்பகலுடன் முடிவடைந்ததும் அதிகாரிகள் இதனை அறிவித்த

(4-ம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்ட விதிகள் தளர்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று நள்ளிரவு முதல் அவசரகாலப்பிரமாணங்களை ஜனாதிபதி பிரேமதாசா நீக்கியுள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டும் நாட்

(4ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் ஆரவார பின்னணியில்

# வடக்கைத் தாக்க அரசு திட்டம்

## கொழும்பு வார இதழ் தகவல்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் ஆரவாரப் பின்னணியில் யாழ். குடா மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான முஸ்தீபுகளை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வருவதாக கொழும்பு வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வார இதழ் தெரிவிக்கையில்: தமிழர்களால் ஏற்கமுடியாத ஒரு தீர்வுத்திட்டத்தை தெரிவுக்குழு முன்வைத்ததைத் தொடர்ந்து மேலும் தமிழ்க் கட்சிகள் அக்குழுவிலிருந்து வெளியேறியுள்ள நிலையிலேயே தேர்தல் ஆரவாரங்களின் பின்னணியில் மேற்படி தாக்குதலுக்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது தமிழர்களின் கோரிக்கைக்கான வலுவை மட்டுப்படுத்தி

(4 ம் பக்கம் பார்க்க)

## ஐ. ஐ. தே. மு. வேட்பாளரை

## நீர்கொழும்பு பொலிஸாரே கடத்தினர் - லலித் தகவல்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வாழைத்தோட்ட பகுதி அமைப்பாளரான விசிக் குணதுங்கா நீர்கொழும்புபொலிசாராலேயே கடத்தப்பட்டதாக ஜ ஐ தே. முன்னணித் தலைவரான லலித் அத்துலத்முதலி நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட திரு. குணதுங்கா நீதிமன்றம் ஒன்றில் இதுவரை ஆஜர் செய்யப்படாமல் பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவரது பெயர் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தமது கட்சியின் சார்பில் இடம்பெற்றிருப்பதாகவும் திரு. அத்துலத்முதலி மேலும் தெரிவித்தார். (இ)

## ஐ. தே. க. 17 மாவட்டங்களில் போட்டி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல்களை அரசியல்கட்சிகளும், சுயேட்சை குழுக்களும் சமர்ப்பிப்பது நேற்றுடன் முடிவடைந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 17 மாவட்டங்களில் போட்டியிடுகிறது.

அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடும் மாகாணங்களினதும் வேட்பாளர்களினதும் எண்ணிக்கை விபரங்கள் வருமாறு:

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ் வன்னி தொடர்பு சேவை நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்- வன்னிப் பகுதிகளிற்கிடையில் செய்திகளை பரிமாற்றிக் கொள்வதற்கான தொடர்புசேவை நாளை 10ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தகவல்களை எழுதி அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான படிவம் எல்லா இடங்களிலும் ஒரு ரூபா கொடுத்து பெற்றுக் கொள்ளலாம் இப்படிவத்தை மொத்தமாகப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் பத்துவீத கழிவுடன் முத்திரைச் சந்தி வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் காரியாலயத்தில் பெற்று கொள்ளலாம் என்று போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கட்சியே வெற்றி பெறுமாம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியே வெற்றிபெறும் என ஐக்கியதேசியக் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் ஜனநாயக

(4-ம் பக்கம் பார்க்க)

## அரச பிரசார சாதனங்கள் மீது அவதானிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபை தேர்தலின்போது பிரசார சாதனங்கள் ரூபவாஹினி வானொலி மற்றும் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பது அவதானிக்கப்படவுள்ளது.

4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் - கடற்படை இணைந்து ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கிளிமுனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் ஸ்ரீலங்கா கடற்படையினரும் இணைந்து நேற்று அதிகாலை மீனவர்களை நோக்கி கடும் பீரங்கித் தாக்

(4ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அலியாவோடை காட்டுப்பகுதியில் கடந்த 26 ம் திகதி படையினருடன் ஏற்பட்ட எதிர்பா

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி விடுதிகளில் கடந்த மாதம் 5000 பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த மார்ச் மாதத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கடும் நோயாளர்

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் கடற்படை தாக்கு

## 2 பயணிகள்பலி; 6பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் தமிழ் பயணிகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன் தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலில் இருபயணிகள் கொல்லப்பட்டனர். 6 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி பாதை திறப்பு: அடிப்படை அளவில் அரசு சம்மதம்

(கொழும்பு)

பூநகரி-சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளபடியால் அரசும் அதற்கு அடிப்படையளவில் சம்மதம் தெரிவித்துள்ளது. இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிறட்மன் வீரக்

(4-ம் பக்கம் பார்க்க

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் முன்னோடிப் பரீட்சை திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை 10ம்திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகுமென கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பிறவுண் பேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" மானிப்பாய். சி 4082)

## தேவை

கொரிலிக்ஸ், வீவா, போத்தல்கள் தேவை. றபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

## சேவை

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இணைமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக லேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (எ-3025)

## பயிற்சி

Basic, d Base III + Lotus 1, 2, 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

## மழலை மேதைகள் போட்டி

பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கற்பிக்கும் பாலர்கள் மட்டும் பங்குபற்றலாம். பரிசுகள் வழங்கப்படும். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி-4087)

## மணமகன் தேவை

இந்து மத 33 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கின்றோம். பெண் அதே தரத்தைச் சேர்ந்தவர். இவ்விடயத்தில் அக்கறை கொள்வோர் முகவரியை மாத்திரம் அறிவித்தால்போதுமானது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி - 4086. (சி - 4086)

## மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

## இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் 93/94

சகல மக்களினதும் பேராதரவைப் பெற்ற இரகுநாதையர் ஸ்ரீமுக வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சொற்ப பிரதிகளே கையிருப்பில் உண்டு. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். விலை 60-00 மட்டுமே. (ஏ-3041)

## வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன்கோல்ட் கவறிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3042)

## பாலராசிரியராக

பாலராசிரியராக, தபால் வழியிலும் சனி, ஞாயிறு நேரிலும் பயிற்சி பெறலாம். சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம் க. பொ. த. (சா/த) கடைசித்தகைமை பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி-4088)

## கணிதப்பயிற்சி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக்கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணிதபாட சேவைக்காலப் பயிற்சி கோப்பாயில் உள்ள யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில இம்மாதம் 19ம் திகதி காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-20 மணி வரை நடைபெறவுள்ளது. (139)

## விளையாட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூகநிலைய பாலர் பாடசாலைச்சிறார்களின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு. சின்னத்துரை சதானந்தன் கௌரவவிருந்தினராக திரு. பா. மாவி (கிராமியப் பொறுப்பாளர் த. வி. பு. அரியாலைப் பிரதேசம்) ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## இராசி பலன்

09-04-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 27)

திருதியை மு. இ. 7-23 வரை, விசாகம் மு. இ. 9-41 வரை மரணயோகம் இராகு காலம் காலை 10-37 முதல் 12-07 வரை, சுபநேரம் காலை 6-07 முதல் 7-37 வரை.

மேஷம்: தொழில் சிறப்பு, வஸ்திரலாபம், பெரியோர் ஆசி.

இடபம்: மன மகிழ்ச்சி, இனிய சம்பாஷணை, தொழில் லாபம்.

மிதுனம்: பண க்குறைவு, தாழ்ந்தநிலை, அன்னிய பகை.

கடகம்: தனக்குறைவு, பொருள் நஷ்டம், அலைச்சல்.

சிங்கம்: காரிய சித்தி, புதிய தொழில் முயற்சி, மன மகிழ்ச்சி.

கன்னி: மனசஞ்சலம், பிறர் குறை கேட்டல், வெறுப்பு.

துலாம்: கௌரவம், பயண அனுகூலம், தானதர்மம்.

விருச்சிகம்: வீண்பழி, அவசர செயல், தொழில் நஷ்டம்

தனுசு: அதிக விமர்சனம் தாழ்ந்த நிலை, கண்ணில் ரோகம்.

மகரம்: உயர்ந்தநிலை சந்தோஷம் மிகுதி, விருந்துண்ணல்.

கும்பம்: நிர்ப்பந்தம், குடும்ப பிரிவு, கைப்பொருள் செலவு.

மீனம்: பகைமூட்டம் அதிக யோசனை, காரிய தடை.

— ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க நுண்கலை மன்றத்தின் நான்காவது மாதாந்த தொடர் கருத்தரங்கு இன்று 9ம் திகதி வெள்ளி கிழமை காலை 9 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் நடைபெறஉள்ளது.

கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமை வகிக்கும் இக்கருத்தரங்கில் 'அழகியற்கொள்கை' என்ற தலைப்பில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா கருத்துரை வழங்கவுள்ளார். (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு அ.த.பாடசாலைமெய் வல்லுனர் போட்டி இன்று 9ம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் திரு வே. இராமர் தலைமையில் நடைபெறவுள்ளது

முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் கலந்துகொள்கிறார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக அங்கத்தவர்கள், பழைய மாணவர்களுக்கான விசேட கூட்டம் இன்று 9-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமசேவை கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்று பக்திப் பாடல் நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தவுள்ளது.

0 0 0

(அரியாலை)

யாழ். புனித மரியன்னை பேராலய முன்றலில் பெரிய வெள்ளி தினத்தையொட்டி இன்று 9ம் திகதி காலை 6-30 மணிக்கு திருச்சிலுவையின் சிந்தனை. மாலை 3-30 மணிக்கு வார்த்தை வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை — திருவிருந்து ஆகியன நடைபெறும். (59)

0 0 5

பருத்தித்துறை

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் தொடர் அறிவியல் கருத்தரங்கின் இரண்டாவது நிகழ்வு பருத்தித்துறை சிவன்கோவில் கலாமண்டபத்தில் இன்று 9ம் திகதி பி.ப. 3-30 மணிக்கு ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் திரு கே ஆர் இராசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (52)

0 0 0

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிக்கழகத்தின் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று 9ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாநகர ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## 36 மாணவர்கள் சித்தி

(அச்சுவேலி)

அண்மையில் வெளியாகிய க. பொ. த சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் 36 மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

செல்வன் இராசரத்தினம் துஷ்யந்தன் 6 பாடங்களில் அதிவிசேட (டீ) சித்தியும் 2 பாடங்களில் விசேட (சீ) சித்தியும் பெற்றுள்ளார். (74)

## யாழ்.மாவட்ட ச. ச. நிலையங்களின் கவனத்திற்கு

யாழ். மாவட்டத்திலுள்ள சன சமூக நிலையங்கள் சில பல்வேறு தேவைகளுக்காக நிதிகள் சேகரித்தல் சம்பந்தமாகப் பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதால், எதிர்வரும் காலங்களில் எந்தஒரு சன சமூக நிலையமும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முன் அனுமதியின்றிப் பொதுமக்களிடம் இருந்து நிதி சேகரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றேன். அனுமதியுடன் நிதி சேகரிக்கும் பட்சத்தில் நிதி சேகரித்து முடிந்ததும் அவற்றின் விபரத்தினை உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

93-04-07.

(ஏ-3038)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முழு நேர உபவிடுதித் தலைவர் (ஒப்பந்த அடிப்படையிலான பதவி) தொடர்பாகச் செய்தித் தாள்களில் வெளிவந்த விளம்பரத்திற்கு மேலதிகமாக.

இவ்விளம்பரத்திற்கான முடிவு தேதி தற்போது 1993 ஏப்ரல் 20 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(அ) வெற்றிபெறும் விண்ணப்பதாரர் மீளளிக்கப்படும் பிணை வைப்பாக ரூபா 5000/- செலுத்துதல் வேண்டும். முன்னர் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டவாறு 10,000/- ரூபா அல்ல என்பதனையும்

(ஆ) முந்திய விளம்பரத்திற்கு ஏற்ப விண்ணப்பித்தோர் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதனையும் தயவுசெய்து கவனிக்கவும்.

பதிவாளர்-
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-04-07.

(எ-3040)

## கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன வீடு, காணி தளபாட விற்பனைக்கு


யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி 93/7ம் இலக்க ஒரு பரப்புக் காணியும் வீடும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன தளபாடங்களும் விற்பனைக்குண்டு. வீட்டையும் தளபாடங்களையும் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கலாம். தொடர்பு:-

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4085)

## எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா மார்க்கண்டு**

தோற்றம்: 26-04-1926 மறைவு: 08-04-1985

எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, சகோதரன், சகோதரிமார்,
மருமக்கள், மைத்துனர், மைத்துனிமார்.

பிரதான வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

(சி-4084)

# உலக மக்கள் அனைவரும் உய்ய உயிர் கொடுத்த உத்தமர்

இன்று பெரிய வெள்ளி புனிதமான வெள்ளி. இறைமகன் கிறீஸ்து பாடுகள் பல பட்டு மனுக்குலம் வாழ மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்ற தினம். 'உலக மக்கள் அனைவரும் உய்வதற்காக, உயிர் கொடுத்த உன்னத நாள். அனைத்துலக கிறீஸ்தவர்களும் இன்று பக்திப் பெருக்கோடு அவர் எமக்காக பட்டபாடுகளைத் தியானித்து, கண்ணீர் சிந்தும் நாள். எமது பாவச் சுமைகளை, தன் தோள் மீது சிலுவையாகச் சுமந்து, அதே சிலுவையில், அவமான மரணத்தை அணைத்துக்கொண்ட தினம், "கோதுமை மணி, மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் மிகுந்த பலன் அளிக்கும்" (அரு 12:24) என்ற அவரது போதனைக்கொப்ப வாழ்ந்து காட்டிய நாள்.

வாழுமுன் வரலாறு வகுத்த வள்ளலாம் கிறீஸ்து எம்மேல் கொண்ட அளவற்ற அன்பினால் தான் மண்ணுலகில் மனித வடிவில் வந்தார். மக்கள் திருந்த வேண்டும். தம் தவறுகளுக்காக வருந்தவேண்டும் என்பது தான் அவரது வேணவா. இதற்காக அவர் போதகம் செய்து, மக்களை நல்வழிப்படுத்த எண்ணினார். தான் மெய்யான கடவுளின் மகன் என்பதைச் சான்றுபடுத்த பல அருங்குறிகளை எல்லாம் ஆற்றினார். ஆனால் மக்களோ அதற்குச் செவிசாய்க்கவில்லை.

கிறீஸ்து, சிலுவைச் சாவை ஏற்குமளவிற்குத் தம்மைத் தாழ்த்தினார். இதன் மூலம் அவர் எமக்குத் தாழ்ச்சியைக் கற்பித்தார். தாம் பாடுபடுவதற்கு முந்திய நாளாகிய பெரிய வியாழன் அன்று தமது சீடர்களின் பாதங்களை கழுவி எமக்கெல்லாம் முன்னுதாரணராக விளங்கினார். சிலுவையாகிய துன்பங்களை நாம் சுமந்து தான் ஆகவேண்டும் என்பதற்காக, தான் சுமந்த சிலுவையின் மூலம் பெருமை வாங்கித்தார்; அத்தோடு, "என்னைப் பின்செல்ல விரும்புபவன், தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னே வரட்டும்" என்றார். "சிலுவை வழி தான் நம் சீவியத்தின் வழி" என்பதை எண்பித்தார்.

அன்பின் அரசர், மனுக்குல மகிபன், வாழ்ந்து காட்டிய வகையில், மண்டை ஓட்டு மலையிலே, சிலுவைச் சிம்மாசனத்திலே, மூன்று ஆணிகளில், மும்மணி நேரம் தொங்கினார். அந்த இறுதி வேளையிலே அவர் விடுத்த செய்தி மன்னிப்பு "பிதாவே" இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்" என்பதாகும். இதன் மூலம் அவர் எமக்காக உயிர் துறக்கும் முன், எமக்குக் கற்றுத் தந்த பாடம், "மன்னித்து வாழுவோம்" என்பதாகும். மன்னிப்பின் மகத்துவத்தை எடுத்துக் காட்டினார். "பகைவர்களையும் அன்பு செய்யுங்கள்" என்று கூறியவர், அந்தக் கொடிய நேரத்திலும் வாழ்ந்து காட்டினார்.

இன்றைய நாளிலே இறைமகன் பாடுகளைத் தூய சிந்தையோடு தியானிப்போம். பாடுகளின் பாதையிலே நாமும் நடப்போம். சிலுவையாகிய துன்பங்களைப் பொறுமையுடன் சுமப்போம். தன் மந்தைகளுக்காக உயிர் கொடுத்த அந்த நல்ல ஆயனை நினைப்போம். அவன் வழி நடப்போம். சிலுவையின் பெருமையை, மகிமையை உணர்ந்து நினைந்து வாழ்வோம்.

—மைதிலி தார்சிசியஸ்

### படையினர் வந்த 'அவ்ரோ' முன்சக்கரம் கழன்றது

# 52 இராணுவ உத்தியோகத்தர் மயிரிழையில் உயிர் தப்பினர்

(கொழும்பு)

ஐம்பத்திரண்டு ராணுவ உத்தியோகத்தர்களுடன் பலாலியில் விபத்துக்குள்ளாக இருந்த அவ்ரோ விமானம் விமானியின் சாதுரிய முயற்சியால் விபத்து தவிர்க்கப்பட்டது.

இச்சம்பவம் நடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றதாக தெரிய வருகிறது.

விமானப் படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானம் ஒன்று ராணுவ உத்தியோகத்தர்களை இரத்மலானையில் ஏற்றிக்கொண்டு, பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கும் வேளை விமானத்தின் முன்சக்கரம் கழன்று இருந்தது இறுதி நேரத்தில் கண்டு கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப விமானம் பலாலியில் இறக்கப்படாமல் மீண்டும் இரத்மலானைக்கு திருப்பப்பட்டு இரண்டரை மணித்தியாலங்கள் ஆகாயத்தில் வட்டமிட்டபின் ஒருவாறு விபத்தின்றி அங்கு தரை இறக்கப்பட்டது. (கே)

## முகாமைத்துவ வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரையும் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாத பகுதி தலைவர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி வகுப்பு இன்று 9ம் திகதி முதல் இம்மாதம் 12ம் திகதி வரை தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. (159)

## தவக்கால நற்சிந்தனை

பெரியவெள்ளி

"சிலுவைச்சாவை ஏற்கும் அளவுக்கு கிறீஸ்து நமக்காகக் கீழ்ப்படியலானார்" (பிலிப் (2:8) இன்று உலகோர் இரட்சணியத்திற்காக உன்னதராம் கிறீஸ்து உயிர் நீத்தார். நம் மேற்கொண்ட அன்பினால் அவர் சிலுவை மரணத்தை ஏற்றார். பாவப் பரிகாரத்திற்காகப் பலியானார். இதனை நாம் அறிந்து, உணர்ந்து, திருந்தி வருந்தி வாழ்கிறோமா? எமது வாழ்வில் மனமாற்றம், ஒப்புரவு ஏற்பட்டதா? அவரின் மரணம் எமக்கு ஓர் ஜனனத்தை ஏற்படுத்தியதா? சிலுவை வழியில் எமது சீவியத்தை மாற்றுவோம். அவரின் தியாகம் எமது வாழ்வின் தீபமாக சுடர்விடவேண்டும். இருள் அகற்றவேண்டும்.

யோ. நா.

### தமிழ்நாட்டில்

## தமிழை புறக்கணிக்கும் அலுவலர்களுக்கு தண்டனை

(சென்னை)

தமிழ் நாட்டில் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலமொழியில் கருமமாற்றும் அரசு அலுவலர்க்கு தண்டனை வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

தமிழ்மொழி அமுல் 40 ஆண்டு காலமாக இருந்த போதும், சில அரசு அதிகாரிகள் ஆங்கிலத்திலேயே இன்னமும் கருமமாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தமிழ்மொழியை ஒழுங்காக அமுல்படுத்த முடியாதுள்ளது. இதனாலேயே இந்த உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, தமிழை அமுலாக்குவதற்காக உதவிபுரியும் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு மற்றும் சலுகைகள் வழங்கப்படுமெனவும் தமிழக அரசு அறிவித்துள்ளது. (கே)

## உற்பத்தி எழுச்சி வாரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் எதிர்வரும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பனை மரம் ஏறுதல் குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல் ஆகிய போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டியிலே கலந்துகொண்டு வெற்றி பெறுனர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் 12-04-93-ம் திகதி நண்பகல் 12-10 மணிக்கு முன்னதாக தமது பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக அண்மையில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

### கூடைப்பந்தாட்டம்:

## பல்கலைக்கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

'உதயன்' அனுசரணையுடன் யாழ் மாவட்ட செயலகம் நடாத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்களில் யாழ். பல்கலைக்கழக ஆண், பெண் அணிகள் சாம்பியனாகின.

நேற்று முன் தினம் மாலை யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணி எதிர் யுத் காமேல் பெண்கள் அணி மோதிய போது யாழ். பல்கலைக்கழக அணி 38 : 12 என்ற விகிதத்தில் வெற்றிபெற்றது.

ஆண்கள் ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணி எதிர் ஷப்ரு அணி மோதியது. இவ்வாட்டம் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று ஈற்றில் யாழ். பல்கலைக்கழக அணி 46 : 44 என்ற விகிதத்தில் வெற்றி பெற்றது. (கி)

## யாழ். வன்னி ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே தற்போது போக்குவரத்துச் சீர்மை காரணமாக ஏற்பட்டுள்ள தகவல் பரிமாற்றத் தடங்கல்களை கருத்திற்கொண்டு யாழ். நகரிற்கும் கிளிநொச்சிக்குமிடையேயான தொடர்புச் சேவை ஒன்றைப் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம். எமது செயற்பாட்டின் ஆரம்ப முயற்சியாக கீழ்க்காணும் நடைமுறைகளுக்கேற்ப ஆரம்பிக்கப்படும். குறிப்பிட்ட நடைமுறை பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் எல்லாத் தமிழீழ மக்களிடம் இருந்தும் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

இச்சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையில் (முன்னை பகைப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டடத்தில்) கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும்.

செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 வரையும், மாலை 1-30 தொடக்கம் 5-00 மணி வரை இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களைக் கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

சலுகை அடிப்படையிலான தகவல்கள்: பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும் செய்திகளும் மரணஅறிவித்தற் செய்திகளும் சலுகை அடிப்படையிலான தகவல்களாகக் கொள்ளப்படும். வைத்திய அதிகாரியின் குறிப்பிட்ட பிரதேச கிராம சேவகர் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

15ற்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15ம், மேலதிகமாக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2ம் அறவிடப்படும்.

குறிப்பு: பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும், மரணஅறிவித்தற் செய்திகளையே சாதாரண தகவல்களாக ஏற்றுக்கொள்வதாக இருப்பினும் மேற்குறிப்பிட்டுள்ளோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருக்க வேண்டும்.

வியாபாரத் தகவல்: தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்கள் இக்குறிப்பிட்ட வகையில் அடங்கும். முதற் பத்து சொற்களுக்கும் ரூபா 100ம், மேலதிகமாக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15ம் கட்டணமாக அறவிடப்படும்.

வழமையான தகவல்; மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத் தகவலிலும் வியாபாரத் தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்படும். முதற் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 50ம் மேலதிகமாக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

விநியோக வகைகள்: சாதாரண விநியோகம்: தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் அவ்வப்பகுதித் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட [illegible] கைவிடப்படும். [illegible] குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும் விரைவு விநியோகம்: இத் தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியில் தபால் ஊழியரின் ஒத்துழைப்புடன் 'நேரடியாக'' விநியோகிக்கப்படும். விரைவு விநியோகத்திற்காகச் சாதாரண கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

குறிப்பு: (1) வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டி வீதியை மையமாக வைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்தில் இருந்து மூன்று மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளிற்கும் குஞ்சுப்பரந்தன் இறங்குதுறைப் பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும். (2) தெளிவில்லாத முகவரிகள், தகவல் விபரங்கள் என்பனவற்றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பனவற்றிற்காக விநியோக சேவையினர் பொறுப்பேற்கமுடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களிற்காகத் தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம். (3) வன்னிப் பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனை நிலைய கருமபீடத்தையும் கிளிநொச்சி அலுவலகத்தையும் முகவரியாக அமைத்துத் தகவல் அனுப்பலாம் உரியவர் தன்னை உரிய ஆவணத்தினூடாக அடையாளம் காட்டிக் கோரும் பட்சத்தில் தகவல் வழங்கப்படும். (4) கட்டணங்கள் யாவும் பணமாகவே செலுத்தப்பட வேண்டும். (5) விரைவு விநியோகத்திற்காகத் தகவல்களை ஒப்படைப்பவர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்படைக்கும்போதே பதில் தகவல் பெற்று அனுப்பப்படும். (6 தகவல் விநியோகப் படிவத்தினை ரூபா 1 கொடுத்து பரவலாக எல்லா இடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (7) எல்லாத் தகவல்களும் தமிழ் மொழியில் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். (8) தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வடபகுதிக்கு வெளியேசெல்லும் அனுமதி அட்டையையோ காட்டித் தன் அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் இச்சேவை ஆரம்ப நடைமுறை வெற்றியை வைத்தே தொடரும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (கி)

## 106 பேருக்கு சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் 106 பேர் நாய்க்கடிக்கு சிகிச்சை பெற்றனர். (72)

## பரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பழனி ஆண்டவர் ஆலய நடப்பாண்டு பரிபாலனசபை தெரிவு விபரம் வருமாறு போஷகர் ஆத்மஜோதி நா. முத்தையா. தலைவர் மு. பரமேஸ்வரன், உபதலைவர் சி மகாலிங்கம் பொதுச்செயலாளர் ம. விவேகானந்தன், உபசெயலாளர் சி. ரவீந்திரநாதன், பொருளாளர் க. நடராசா, உபபொருளாளர் ஆ. சிவபாலன் ஆகியோர் உட்பட ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (கி)

## வடபகுதிக்கு 3 மாதத்தில்
# 26,50[illegible] மெ. தொன் உணவு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கு சமார் 26 ஆயிரத்து 509 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் அனுப்பிவைத்துள்ளதாக புனர்வாழ்வு – புனர்நிர்மாண சமூக நல விருத்தி அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிராமோதய நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களிலும் மேற்படி உணவுப்பொருள்கள் யாழ். அரச அதிபர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டன.

மேலும் 6 ஆயிரத்து 500 பீப்பா மண்ணெண்ணெயும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நேற்றுதம்மைச்சந்தித்தயாழ். அரச அதிபர் வடபகுதிக்கு 5000 பீப்பா மண்ணெண்ணெ அனுப்புமாறு கேட்டுக் கொண்டதாகவும் அவர்தெரிவித்தார். (உ-இ)

## செயலக ஊழியர்க்கு ம. எண்ணெ

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஊழியர்களுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 15 ரூபா வீதம் ஒருவருக்கு 3 லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று முதல் வழங்கப்படுகின்றது.

யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் மேற்படி மண்ணெண்ணெய் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தமிழக சட்டப் பேரவையிலிருந்து
# இடைநிறுத்தப்பட்ட நான்கு உறுப்பினரின் தடை நீக்கம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் எஞ்சிய கூட்டத் தொடர்களில் கலந்துகொள்ளவேண்டாம் என இடைநிறுத்தி வைக்கப்பட்ட 4 உறுப்பினர்கள்மீதான தடையுத்தரவு விலக்கிக்கொள்ளப் பட்டதாக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா நேற்று அறிவித்துள்ளார்.

இந்திராகாங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. ரங்கநாதன், திரு. ஞானசேகரன், சுயேச்சை உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ், மற்றும் தி. மு. க. உறுப்பினர் பருதி இளம்வழுதி ஆகியோரே சட்டமன்ற கூட்டத்தொடர்களிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களாவார்.

இதற்கிடையில் பேரவைக் கூட்டங்களிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் பேரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படவேண்டுமென இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சென்னையில் கோட்டைக்கு முன்னால் உண்ணாவிரதம் அனுஷ்டித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

---

### ஐ. தே. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியதேசிய முன்னணி இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதை எவராலும் தடுக்க முடியாது என கட்சித் தலைவர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் தேர்தலில் ஆகக் குறைந்தது 5 மாகாணசபைகளின் ஆட்சியைக் கைப் பற்றிக்கொள்ளும் என கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ஏ. விஜேகோன். தெரிவித்தார். (இ)

### மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 93 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏழு மாகாணசபைகளுக்காக 366 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட ஐந்து அரசியல் கட்சிகளும், பல சுயேச்சைக் குழுக்களும் நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. இரண்டாயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (இ)

### அவசரகால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் பாதுகாப்பு நிலைமையை மதிப்பீடு செய்த பின்னரும் மேற்கண்ட முடிவை மேற்கொண்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் பிரமாணங்களுக்கமைய தேர்தல் பிரச்சாரங்களும், வாக்காளர்களும்மாகாணசபை தேர்தல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளமுடியும்என்றும் செயலகம்தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்; நாசகார அரசியல் செயல்பாடு ஒழுங்கு விதிகளின் கீழ் வேலைத்தளங்கள், மற்றும் கல்வி நிறுவனங்களில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளல், அத்தகைய இடங்களில் புகுதல், அல்லது தங்கியிருத்தல் அல்லது கூட்டங்களை நடாத்துதல், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொள்ளல், சுவரொட்டிகள் ஒட்டுதல் ஆகியவற்றுக்கு எதிராக விதிக்கப் பட்டுள்ள தடைகள் நீக்கப் பட்டுள்ளன.

ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் நடாத்துவதற்குரிய ஒழுங்கு விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்குடன் சுவரொட்டிகளை காட்சிக்கு வைத்தல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், வதந்தி பரப்புதல், பிழையான கூற்றை தெரிவித்தல் ஆகியவற்றின் மீதான தடைகளும் நீக்கப் பட்டுள்ளன. (உ-இ)

### இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குதலை நடாத்தினர்.

இதற்கிடையில் நேற்று முற்பகல் 9மணியளவில் மண்டைதீவு இராணுவத்தினரும், கட்டுவன்பகுதி இராணுவத்தினரும் கடும் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதலையும் நடாத்தியுள்ளனர். (154-உ-இ)

### அரச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரப் பத்திரிகையாளர் அமைப்பு மேற்படி பிரசார சாதனங்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

இதன் பொருட்டு தனியாக ஒரு அவதானிப்பு நிலையம் ஒன்றையும் மேற்படி அமைப்பு நிறுவஉள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (இ)

### கிளாலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கரஞ்சிக்கிராமம் கிளிநொச்சியை சேர்ந்த தங்கராசன், ஈச்சங்குளம் கிளிநொச்சியை சேர்ந்த குமார் ஆகியோரே கொல்லப் பட்டவர்களாவார்.

படுகாயமடைந்த 6 பேரும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது. (உ-இ)

### பூநகரி பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோன் நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

மேற்படி பாதை திறப்பது சம்பந்தமாக அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள் யாழ். தமிழ் விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளது பற்றி மேற்படி அதிகாரிகள் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

அரசும், இப்பாதையைத் திறப்பதற்கு அடிப்படையளவில் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் திரு. பிறட்மன் வீரக்கோன் மேலும் கூறினார். (வி)

### வீரச்சாவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராத மோதலில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

2ம் லெப். பாப்பா அல்லது தர்மலிங்கம் பிரகாஸ் (மகிழடித்தீவு), 2ம் லெப். நவக்குமார் அல்லது தியாகராசா நேமிநாதன் (துறைநீலாவணை) வீரவேங்கை தேவதாஸ் அல்லது தேவகுமார் அல்லது வெற்றிவேல் ஸ்ரீதரன் (காரைதீவு) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

இதேதினம் பி. பகல் 3.30 மணியளவில் கலரூபன் அல்லது லோஜித் இளையதம்பி அற்புதராசா (தம்பிலுவில்) சயனைற் அருந்தி வீரச்சாவடைந்தார்.

இதற்கிடையில் கடந்த 19ம் திகதி இயக்க வேலையாக சென்றுவிட்டு திரும்பியபோது விசேட அதிரடிப்படையினர் மறைந்திருந்து தாக்கியதில் வீரவேங்கை விஸ்வம் அல்லது நாகமணி சந்திரசேகரம் (கொக்கட்டிச்சோலை) வீரச்சாவடைந்தார்.

மேலும் கடந்தசனிக்கிழமை போராளிகள் மீது கிரான்பகுதியில் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை ரூபி அல்லது கலிராயர் சண்முகம் சோதிரலிங்கம் (மொறக்கொட்டாஞ்சேனை) வீரச்சாவு அடைந்தார். (வ)

### யாழ். ஆஸ்பத்திரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### தேர்தல் ஆரவார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதாவது ஒரு தீர்வுக்கு தமிழர்களை ஒத்துக்கொள்ளச் செய்யும் ஒரு நடவடிக்கையாகும்.

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதன்மூலம் மட்டுமே தமிழர்களின் கோரிக்கைகளுக்கான வலுவை பலவீனப்படுத்தலாம் என ஸ்ரீலங்கா அரசு கருதுகின்றது.

தமிழர்களின் உரிமை கோரும் சக்தி விடுதலைப் புலிகளின் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதனை பேரினவாதக் கட்சிகள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளன எனவும் கடந்த 10 வருட காலத்தில் பேச்சுவார்த்தைகளும் அங்கு முன்வைக்கப்படும்திட்டங்களை மேற்கொள்வதும் ஸ்ரீலங்கா அரசு மாறியாறிக் கடைப் பிடிக்கும் ஒரு தந்திரோபாயம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆனால் ஒரு கெரில்லாப் போராட்டத்தை இராணுவ ரீதியில் அழிக்கமுடியாது என்பதனை ஸ்ரீலங்காஅரசு புரிந்து கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அஇ)

### ஐ. தே, க. 17

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | மாவட்டங்களின் எண்ணிக்கை | வேட்பாளர்களின் தொகை |
|---|---|---|---|
| 1. | ஐ. தே. க. | 17 | 417 |
| 2. | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 17 | 417 |
| 3. | பொதுஜன ஐக்கிய முன்னணி | 17 | 417 |
| 4. | மக்கள் விடுதலை ஸ்தாபனம் | 16 | 397 |
| 5. | ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 11 | 293 |
| 6. | ஜனநாயக தொ. கா. | 02 | 66 |
| 7. | தொழிலாளர் தேசிய சங்கம் | 01 | 20 |
| 8. | ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 01 | 20 |

(வ-இ)

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி ருக்மணி செல்லையா

(முன்னாள் உரிமையாளர் அசோகா ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்)

51/53 மத்தியவீதி, திருகோணமலை)

மண்ணில்: 10 - 11 - 1936 விண்ணில்: 04 - 04 -1988

திதி 09 - 04 - 1993

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உனை இழந்தோம். மனம் துடித்தோம்
அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரோ
ஆண்டுகள் ஐந்து உருண்டோடி போய்விட்ட போதிலும்
நீர் எமக்கு ஆறுதலைச் சொல்லிவைக்க வந்திடுவீர்
உங்கள் ஆத்ம சாந்திக்காக எந்நாளும் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமகன், மருமகள்,
பேரன், பேத்தி, தாய், சகோதரங்கள்.

வ. செல்லையா,
''அசோக் வாசம்''
ஏழாலை மத்தி, ஏழாலை. (சி 4081)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10836/B